## ஸ்ரீவசநபூஷணம்

### நான்காம் ப்ரகரணம்

381. த்ரிபாத் விபூதியிலே பரிபூர்ண அநுபவம் நடவா நிற்க, அது உண்டது உருக்காட்டாதே, தேசாந்தரகதனான புத்ரன் பக்கலிலே பித்ரு ஹ்ருதயம் கிடக்குமா போலே, ஸம்ஸாரிகள் பக்கலிலே திருவுள்ளம் குடி போய், இவர்களைப் பிரிந்தால் ஆற்ற மாட்டாதே, இவர்களோடே கலந்து பரிமாறுகைக்குக் கரண களேபரங்களைக் கொடுத்து, அவற்றைக் கொண்டு வ்யாபரிக்கைக்கு ஈடான ஶக்தி விஶேஷங்களையும் கொடுத்து, கண் காண நிற்கில் ஆணை இட்டு விலக்குவர்கள் என்று கண்ணுக்குத் தோற்றாதபடி, உறங்குகிற ப்ரஜையைத் தாய் முதுகிலே அணைத்துக் கொண்டு கிடக்குமா போலே, தான் அறிந்த ஸம்பந்தமே ஹேதுவாக விட மாட்டாதே, அகவாயிலே அணைத்துக் கொண்டு, ஆட்சியில் தொடர்ச்சி நன்றென்று விடாதே, ஸத்தையை நோக்கி உடன்கேடனாய், இவர்கள் அஸத் கர்மங்களிலே ப்ரவர்த்திக்கும் போது மீட்க மாட்டாதே, அநுமதி தானத்தைப் பண்ணி உதாஸீநரைப் போலே இருந்து மீட்கைக்கு இடம் பார்த்து, நன்மை என்று பேரிடல் ஆவதொரு தீமையும் காணாதே நெற்றியைக் கொத்திப் பார்த்தால் ஒரு வழியாலும் பசை காணாது ஒழிந்தால் அப்ராப்யம் என்று கண்ண நீரோடே மீளுவது; தனக்கேற இடம் பெற்ற அளவிலே, என் ஊரைச் சொன்னாய், என் பேரைச் சொன்னாய், என் அடியாரை நோக்கினாய், அவர்கள் விடாயைத் தீர்த்தாய், அவர்களுக்கு ஒதுங்க நிழலைக் கொடுத்தாய் என்றாப் போலே சிலவற்றை ஏறிட்டு, மடிமாங்காய் இட்டு, பொன் வாணியன் பொன்னை உரை கல்லிலே உரைத்து மெழுகாலே எடுத்துக் கால் கழஞ்சென்று திரட்டுமா போலே, ஜந்ம பரம்பரைகள் தோறும், யாத்ருச்சிகம் ப்ராஸங்கிகம் ஆநுஷங்கிகம் என்கிற ஸுக்ருத விஶேஷங்களைக் கற்பித்துக் கொண்டு தானே அவற்றை ஒன்று பத்தாக்கி நடத்திக் கொண்டு போரும்.
382. லலிதா சரிதாதிகளிலே இவ்வர்த்தம் சுருக்கமொழியக் காணலாம்.
383. அஜ்ஞரான மநுஷ்யர்கள் 'வாளா தந்தான்' என்று இருப்பர்கள்.
384. ஜ்ஞாநவான்கள் 'இன்று என்னைப் பொருள் ஆக்கித் தன்னை என்னுள் வைத்தான்', 'எந்நன்றி செய்தேனோ எந்நெஞ்சில் திகழ்வதுவே', 'நடுவே வந்து உய்யக் கொள்கின்ற நாதன்', 'அறியாதன அறிவித்த அத்தா நீ செய்தன அடியேன் அறியேனே', 'பொருள் அல்லாத என்னைப் பொருளாக்கி அடிமை கொண்டாய்', 'என்னைத் தீமனம் கெடுத்தாய்', 'மருவித் தொழும் மனமே தந்தாய்' என்று ஈடுபடா நிற்பர்கள்.
385. பாஷ்யகாரர் காலத்திலே ஒரு நாள் பெருமாள் புறப்பட்டருளுந்தனையும் பார்த்து, பெரிய திருமண்டபத்துக்குக் கீழாக முதலிகள் எல்லாம் திரள இருந்த அளவிலே இவ்வர்த்தம் ப்ரஸ்துதமாக, பின்பு பிறந்த வார்த்தைகளை ஸ்மரிப்பது.
386. ஆகையால் அஜ்ஞாதமான நன்மைகளையே பற்றாசாகக் கொண்டு கடாக்ஷியா நிற்கும்.
387. இவையும் கூட இவனுக்கு விளையும்படியிறே இவன் தன்னை முதலிலே அவன் ஸ்ருஷ்டித்தது.
388. அது தன்னை நிரூபித்தால் இவன் தனக்கு ஒன்றும் செய்ய வேண்டாதபடியாய் இருக்கும்.
389. பழையதாக உழுவது நடுவது விளைவதாய்ப் போரும் க்ஷேத்ரத்திலே உதிரி முளைத்துப் பலபர்யந்தம் ஆமாபோலே, இவை தாம் தன்னடையே விளையும்படி ஆயிற்று; பத்தி உழவன் பழம் புனத்தைச் ஸ்ருஷ்டித்த கட்டளை.
390. அவை தான் எவை? என்றால்.
391. பூர்வ க்ருத புண்யா புண்ய பலன்களை சிரகாலம் புஜித்து, உத்தர காலத்தில் வாஸனை கொண்டு ப்ரவர்த்திக்கும் அத்தனை என்னும்படி கையொழிந்த தசையிலே, நாம் ஆர்? நாம் நின்ற நிலை ஏது? நமக்கு இனி மேல் போக்கடி ஏது? என்று பிறப்பன சில நிரூபண விஶேஷங்கள் உண்டு; அவை ஆதல் முன்பு சொன்னவை ஆதல்.
392. 'யதாஹி மோஷகா: பாந்தே' என்று தொடங்கி, இதினுடைய க்ரமத்தைப் பகவச் ஶாஸ்த்ரத்திலே சொல்லிற்று.

393. "வெறிதே அருள் செய்வர்" என்று இவ்வர்த்தத்தை ஸ்பஷ்டமாக அருளிச் செய்தாரிறே.
394. 'செய்வார்கட்கு' என்று அருளுக்கு ஹேது ஸுக்ருதம் என்னா நின்றதே என்னில்; அப்போது 'வெறிதே' என்கிறவிடம் சேராது.
395. பகவத் ஆபிமுக்யம் ஸுக்ருதத்தால் அன்றிக்கே பகவத் க்ருபையாலே பிறக்கிறது, அத்வேஷம் ஸுக்ருதத்தாலே என்னில்; இந்த பல விஶேஷத்துக்கு அகத்தை ஸாதனம் ஆக்க ஒண்ணாது.
396. ஶாஸ்த்ரமும் விதியாதே நாமும் அறியாதே இருக்கிற இத்தை ஸுக்ருதம் என்று நாம் பேர் இடுகிறபடி என் என்னில், நாம் அன்று, ஈஶ்வரன் என்று கேட்டிருக்கையாய் இருக்கும்.
397. இவ்வர்த்த விஷயமாக ஆழ்வார்கள் பாசுரங்களில் பரஸ்பர விருத்தம் போலே தோற்றுமவற்றில் சொல்லுகிற பரிஹாரமும், மற்றும் உண்டான வக்தவ்யங்களும் விஸ்தர பயத்தாலே சொல்லுகிறிலோம்.
398. ஆகையால் இவன் விமுகனான தசையிலும் கூட உஜ்ஜீவிக்கைக்கு க்ருஷி பண்ணின ஈஶ்வரனை அநுஸந்தித்தால் எப்போதும் நிர்ப்பரனாயே இருக்கும் இத்தனை.
399. 'எதிர் சூழல் புக்கு'.
400. ஒருவனைப் பிடிக்க நினைத்து ஊரை வளைவாரைப் போலே வ்யாப்தியும்.
401. ஸ்ருஷ்டி அவதாராதிகளைப் போலே ஸ்வார்த்தமாக என்றிறே ஜ்ஞாநாதிகர் அநுஸந்திப்பது.
402. கர்ம பலம் போலே க்ருபா பலமும் அநுபவித்தே அற வேணும்.
403. க்ருபை பெருகப் புக்கால் இருவர் ஸ்வாதந்த்ர்யத்தாலும் தகைய ஒண்ணாதபடி இருகரையும் அழியப் பெருகும்.
404. பய ஹேது கர்மம்; அபய ஹேது காருண்யம்.
405. பய அபயங்கள் இரண்டும் மாறி மாறி ப்ராப்தி அளவும் நடக்கும்.
406. நிவர்த்தி அஜ்ஞாநம் பய ஹேது, நிவர்த்தக ஜ்ஞாநம் அபய ஹேது.
407. ஸ்வதந்த்ரனை உபாயமாகத் தான் பற்றின போதிறே இப்ப்ரஸங்கம் தான் உள்ளது.
408. உண்ட போது ஒரு வார்த்தையும் உண்ணாத போது ஒரு வார்த்தையும் சொல்லுவார் பத்துப் பேர் உண்டிறே, அவர்கள் பாசுரம் கொண்டன்று இவ்வர்த்தம் அறுதி இடுவது.
409. அவர்களைச் சிரித்திருப்பார் ஒருவர் உண்டிறே, அவர் பாசுரம் கொண்டு இவ்வர்த்தம் அறுதி இடக் கடவோம்.
410. ஸ்வரூபத்துக்கும் ப்ராப்யத்துக்கும் சேர்ந்திருக்க வேணுமிறே ப்ராபகம்.
411. வடுகநம்பி ஆழ்வானையும் ஆண்டானையும் இருகரையர் என்பர்.
412. ப்ராப்யத்துக்கு ப்ரதம பாவம் ஆசார்ய கைங்கர்யம்; மத்யம பாவம் பகவத் கைங்கர்யம்; சரம பாவம் பாகவத கைங்கர்யம்.
413. ஸ்வரூப ப்ராப்தியை ஶாஸ்த்ரம் புருஷார்த்தமாகச் சொல்லா நிற்க, ப்ராப்தி பலமாய்க் கொண்டு கைங்கர்யம் வருகிறாப் போலே ஸாத்யவிவ்ருத்தியாய்க் கொண்டு சரம பர்வம் வரக் கடவது.
414. இது தான் துர்லபம்.
415. விஷய ப்ரவணனுக்கு அத்தை விட்டு பகவத் விஷயத்திலே வருகைக்கு உள்ள அருமை போலன்று, ப்ரதம பர்வத்தை விட்டு சரம பர்வத்திலே வருகைக்கு உள்ள அருமை.
416. அங்கு தோஷ தர்ஶநத்தாலே மீளலாம்; இங்கு அது செய்ய ஒண்ணாது.
417. தோஷம் உண்டானாலும் குணம் போலே உபாதேயமாய் இருக்கும்.
418. லோக விபரீதமாயிறே இருப்பது.
419. குணம் உபாதேயம் ஆகைக்கு ஈடான ஹேது தோஷத்துக்கும் உண்டிறே.
420. நிர்க்ருணன் என்ற வாய் மூடுவதற்கு முன்னே க்ருணவான் என்று சொல்லும்படியாய் இருந்ததிறே.
421. இப்படி சொல்லும்படி பண்ணிற்று க்ருபையாலே என்று ஸ்நேஹமும் உபகார ஸ்ம்ருதியும் நடந்ததிறே.
422. நிர்க்ருணனாக சங்கித்துச் சொல்லும் அவஸ்தையிலும் காரணத்தை ஸ்வகதமாகவிறே சொல்லிற்று.

423. குண தோஷங்கள் இரண்டும் க்ஷுத்ர புருஷார்த்தத்தையும் புருஷார்த்த காஷ்டையையும் குலைக்கும்.
424. நித்ய ஶத்ருவாயிறே இருப்பது.
425. இப்படி ப்ராப்யத்தை அறுதியிட்டால் அதுக்கு ஸத்ருஷமாக வேணுமிறே ப்ராபகம்.
426. அல்லாத போது ப்ராப்ய ப்ராபகங்களுக்கு ஐக்யம் இல்லை.
427. ஈஶ்வரனைப் பற்றுகை கையைப் பிடித்துக் கார்யம் கொள்ளுமோபாதி; ஆசார்யனைப் பற்றுகை காலைப் பிடித்துக் கார்யம் கொள்ளுமோபாதி.
428. ஆசார்யன் இருவர்க்கும் உபகாரகன்.
429. ஈஶ்வரனுக்கு ஶேஷ வஸ்துவை உபகரித்தான்; சேதநனுக்கு ஶேஷியை உபகரித்தான்.
430. ஈஶ்வரன் தானும் ஆசார்யத்வத்தை ஆசைப்பட்டு இருக்கும்.
431. ஆகையிறே குருபரம்பரையில் அந்வயித்ததும், ஸ்ரீகீதையும் அபயப்ரதாநமும் அருளிச் செய்ததும்.
432. ஆசார்யனுக்கு ஸத்ருஶ ப்ரதி உபகாரம் பண்ணலாவது விபூதி சதுஷ்டயமும் ஈஶ்வர த்வயமும் உண்டாகில்.
433. ஈஶ்வர ஸம்பந்தம் பந்த மோக்ஷங்கள் இரண்டுக்கும் பொதுவாய் இருக்கும்; ஆசார்ய ஸம்பந்தம் மோக்ஷத்துக்கே ஹேதுவாய் இருக்கும்.
434. பகவல்லாபம் ஆசார்யனாலே.
435. ஆசார்ய லாபம் பகவானாலே.
436. உபகார்ய வஸ்து கௌரவத்தாலே ஆசார்யனில் காட்டில் மிகவும் உபகாரகன் ஈஶ்வரன்.
437. ஆசார்ய ஸம்பந்தம் குலையாதே கிடந்தால் ஜ்ஞாந பக்தி வைராக்யங்கள் உண்டாக்கிக் கொள்ளலாம்; ஆசார்ய ஸம்பந்தம் குலைந்தால் அவை உண்டானாலும் ப்ரயோஜநம் இல்லை.
438. தாலி கிடந்தால் பூஷணங்கள் பண்ணிப் பூணலாம்; தாலி போனால் பூஷணங்கள் எல்லாம் அவத்யத்தை விளைக்கும்.
439. தாமரையை அலர்த்தக் கடவ ஆதித்யன் தானே நீரைப் பிரிந்தால் அத்தையும் உலர்த்துமா போலே, ஸ்வரூப விகாஸத்தைப் பண்ணும் ஈஶ்வரன் தானே, ஆசார்ய ஸம்பந்தம் குலைந்தால் அத்தை வாடப் பண்ணும்.
440. இத்தை ஒழிய பகவத் ஸம்பந்தம் துர்லபம்.
441. இரண்டும் அமையாதோ, நடுவில் பெருங்குடி என் என்னில்.
442. கொடியைக் கொள்கொம்பிலே துவக்கும் போது சுள்ளிக்கால் வேண்டுமா போலே, ஆசார்ய அந்வயத்துக்கும் இது வேணும்.
443. ஸ்வாபிமாநத்தாலே ஈஶ்வர அபிமாநத்தைக் குலைத்துக் கொண்ட இவனுக்கு, ஆசார்ய அபிமாநம் ஒழிய கதி இல்லை என்று பிள்ளை பலகாலும் அருளிச் செய்யக் கேட்டிருக்கையாய் இருக்கும்.
444. ஸ்வ ஸ்வாதந்த்ர்ய பயத்தாலே பக்தி நழுவிற்று.
445. பகவத் ஸ்வாதந்த்ர்ய பயத்தாலே ப்ரபத்தி நழுவிற்று.
446. ஆசார்யனையும் தான் பற்றும் பற்று அஹங்கார கர்பம் ஆகையாலே, காலன் கொண்டு மோதிரம் இடுமோபாதி.
447. ஆசார்ய அபிமாநமே உத்தாரகம்.
448. கைப்பட்ட பொருளைக் கைவிட்டுப் புதைத்த பொருளைக் கணிஸிக்கக் கடவன் அல்லன்.
449. விடாய் பிறந்த போது கரஸ்தமான உதகத்தை உபேக்ஷித்து, ஜீமூத ஜலத்தையும் ஸாகர ஸலிலத்தையும் ஸரித் ஸலிலத்தையும் வாபீ கூபபயஸ்ஸுக்களையும் வாஞ்சிக்கக் கடவன் அல்லன்.
450. பாட்டுக் கேட்கும் இடமும், கூப்பீடு கேட்கும் இடமும், குதித்த இடமும், வளைத்த இடமும், ஊட்டும் இடமும், எல்லாம் வகுத்த இடமே என்று இருக்கக் கடவன்.
451. இவனுக்கு ப்ரதிகூலர் ஸ்வதந்த்ரரும் தேவதாந்தரபரரும்; அநுகூலர் ஆசார்ய பரதந்த்ரர்; உபேக்ஷணீயர் ஈஶ்வர பரதந்த்ரர்.

452. ஜ்ஞாந அநுஷ்டானங்கள் இரண்டும் அல்லாதார்க்கு உபாய அங்கமாய் இருக்கும், இவனுக்கு உபேய அங்கமாய் இருக்கும்.
453. இவனுக்கு நிஷித்த அநுஷ்டானம் தன்னையும் பிறரையும் நசிப்பிக்கையாலே த்யாஜ்யம்.
454. தான் நசிக்கிறது மூன்று அபசாரத்திலும் அந்வயிக்கையாலே; பிறர் நசிக்கிறது தன்னை அநாதரித்தும் தன்னநுஷ்டானத்தை அங்கீகரித்தும்.
455. விஹித போகம் நிஷித்த போகம் போலே லோக விருத்தமும் அன்று; நரக ஹேதுவும் அன்று; ஆயிருக்கச் செய்தே ஸ்வரூப விருத்தமுமாய் வேதாந்த விருத்தமுமாய் ப்ராப்ய ப்ரதிபந்தகமுமாய் இருக்கையாலே த்யாஜ்யம்.
456. போக்யதா புத்தி குலைந்து தர்ம புத்யா ப்ரவர்த்தித்தாலும் ஸ்வரூபம் குலையும்.
457. 'க்ஷேத்ராணி மித்ராணி' என்கிற ஶ்லோகத்தில் அவஸ்தை பிறக்க வேணும் ஸ்வரூபம் குலையாமைக்கு.
458. ப்ராப்ய பூமியில் ப்ராவண்யமும், த்யாஜ்ய பூமியில் ஜிஹாஸையும், அநுபவ அலாபத்தில் ஆத்ம தாரணா யோக்யதையும், உபாய சதுஷ்டயத்துக்கும் வேணும்.
459. 'பழுதாகாதொன்று அறிந்தேன்' என்கிற பாட்டை பூர்வோபாயத்துக்கு ப்ரமாணமாக அநுஸந்திப்பது.
460. 'நல்லவென் தோழி' 'மாறாய தானவனை' என்கிற பாட்டுக்களையும் ஸ்தோத்ரத்தில் முடிந்த ஶ்லோகத்தையும் 'பஶுர்மநுஷ்ய:' என்கிற ஶ்லோகத்தையும் இதுக்குப் ப்ரமாணமாக அநுஸந்திப்பது.
461. ஆசார்ய அபிமாநம் தான் ப்ரபத்தி போலே உபாயாந்தரங்களுக்கு அங்கமாய் ஸ்வதந்த்ரமுமாய் இருக்கும்.
462. பக்தியில் அஶக்தனுக்கு ப்ரபத்தி; ப்ரபத்தியில் அஶக்தனுக்கு இது.
463. இது ப்ரதமம் ஸ்வரூபத்தைப் பல்லவிதம் ஆக்கும், பின்பு புஷ்பிதம் ஆக்கும், அநந்தரம் பலபர்யந்தம் ஆக்கும்.

**நான்காம் ப்ரகரணம் ஸம்பூர்ணம்**

**பிள்ளை லோகாசார்யர் திருவடிகளே ஶரணம்**

**ஸ்ரீவசநபூஷணம் ஸம்பூர்ணம்**